# <u>செய்தி வெளியீடு</u>

செய்தி வெளியீடு எண்.47/2024 நாள் : 25.06.2024

**கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி முழு கொள்ளளவை எட்டிய நிலையில் நாளொன்றுக்கு 180 MLD குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு சீராக விநியோகிக்கப்பட்டு வருகிறது.**

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 89 இலட்சம் பொதுமக்களுக்கு, குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நீண்டகால குடிநீர்த் தேவை மற்றும் மக்களின் அன்றாட குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 MLD திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் மற்றும் நெம்மேலியில் 110 MLD மற்றும் கூடுதலாக 150 MLD ஆகிய கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களின் மூலம் தற்போது நாளொன்றுக்கு 1060 MLD குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. மேலும், குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்றுவரும் பகுதிகள், அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் தினசரி வழங்கப்படுகிறது.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் நீர் ஆதாரங்களில் ஒன்றான கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி நீர் வரத்து இல்லாத நிலையில், குடிநீர் விநியோகிக்க இயலாத நிலை ஏற்பட்டது. அதற்கு மாற்று ஏற்பாடாக, சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில், வீராணம் ஏரியைச் சுற்றியுள்ள இதர நீராதாரங்களான நெய்வேலி சுரங்கம், ஆழ்துளை கிணறுகள், பரவனாறு ஆகியவற்றிலிருந்து நாளொன்றுக்கு 70 MLD குடிநீர் எடுக்கப்பட்டு, நெம்மேலியில் உள்ள 150 MLD கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்தும் நீர் எடுக்கப்பட்டு பெருநகர சென்னை

மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-8 (அண்ணா நகர்-பகுதி), மண்டலம்-9 (தேனாம்பேட்டை-பகுதி), மண்டலம்-10 (கோடம்பாக்கம்-பகுதி), மண்டலம்-11 (வளசரவாக்கம்), மண்டலம்-12(ஆலந்தூர்) மற்றும் மண்டலம்-13(அடையாறு-பகுதி) ஆகிய பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்காக மேட்டூர் அணையிலிருந்து கல்லணை மற்றும் கீழணை மூலமாக 26.05.2024 அன்று குடிநீர் தேவைகளுக்காக வீராணம் ஏரிக்கு தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில் தற்போது வீராணம் ஏரி முழு கொள்ளளவான 1465 மில்லியன் கன அடியை எட்டியுள்ளது. தற்போது, வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்கு நீர் எடுக்கும் பணிகள் துவங்கப்பட்டு நாளொன்றுக்கு 180 MLD நீர் எடுத்து சுத்திகரிக்கப்பட்டு மண்டலம்-8 (அண்ணா நகர்-பகுதி), மண்டலம்-9(தேனாம்பேட்டை-பகுதி), மண்டலம்-10 (கோடம்பாக்கம்-பகுதி), மண்டலம்-11(வளசரவாக்கம்), மண்டலம்-12(ஆலந்தூர்) மற்றும் மண்டலம்-13 (அடையாறு-பகுதி) ஆகிய பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater